©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 214A] சென்னை, வியாழக்கிழமை, ஜூலை 6, 2017
ஆனி 22, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு-2048

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2017–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 6–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2017.**

**1978–ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுதல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாவது ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:–

தமிழ்நாடு சட்டம் 28/1978.

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம் 2017 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுதல் (திருத்தச்) சட்டம் என அழைக்கப்பெறும்.

(2) இது 1994 ஆம் ஆண்டு அக்டோபர் 17 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்து விட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

4 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுதல் சட்டத்தின் (இதன் பின்பு முதன்மைச் சட்டம் என்று குறிப்பிடப்படுவதான) 4 ஆம் பிரிவில், (f) கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(f) அரசால் நியமனம் செய்யப்பட்ட நான்கு முழுநேர இயக்குநர்கள், அதாவது:–

*(i)* ஒரு மேலாண்மை இயக்குநர்;

*(ii)* ஒரு நிருவாக இயக்குநர்;

*(iii)* ஒரு நிதி இயக்குநர்; மற்றும்

*(iv)* ஒரு பொறியியல் இயக்குநர்.".

10–A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**10–A. நிருவாக இயக்குநர்.–**(1) நிருவாக இயக்குநர், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுதல் தொடர்பான பொருட்பாடுகள் தொடர்பாக தனி அறிவினை அல்லது பட்டறிவினை உடையவராய் இருத்தல் வேண்டும் அல்லது நிருவாகப் பொருட்பாடுகளில் மற்றும் ஏற்பாடுகளில் போதிய முன் அனுபவத்தை உடையவராய் இருத்தல் வேண்டும்.

(2) நிருவாக இயக்குநர், 12 ஆம் பிரிவின்படி பொருந்தக்கூடிய ஓய்வு பெறும் வயது வரையில் அல்லது 12 ஆம் பிரிவின்படி தீர்மானிக்கப்பட்ட வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளைத் தொடர்ந்து அவருடைய பணி முடிவுறுத்தப்படும் வரையில் பதவி வகித்தல் வேண்டும்.".

12 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவில், "மேலாண்மை இயக்குநர், நிதி இயக்குநர்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக, "மேலாண்மை இயக்குநர், நிருவாக இயக்குநர், நிதி இயக்குநர்" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

17 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவில், 1 ஆம் உட்பிரிவில்,–

(1) (a) கூறில் "மேலாண்மை இயக்குநர்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக, "மேலாண்மை இயக்குநர், நிருவாக இயக்குநர்" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (b) கூறில் "மேலாண்மை இயக்குநர், நிதி இயக்குநர்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக, "மேலாண்மை இயக்குநர், நிருவாக இயக்குநர், நிதி இயக்குநர்" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) (d) கூறில் "மேலாண்மை இயக்குநர், நிதி இயக்குநர்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக, "மேலாண்மை இயக்குநர், நிருவாக இயக்குநர், நிதி இயக்குநர்" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(4) (e) கூறில் "மேலாண்மை இயக்குநர், நிதி இயக்குநர்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக, "மேலாண்மை இயக்குநர், நிருவாக இயக்குநர், நிதி இயக்குநர்" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

செல்லத்தக்க தாக்குதல்.

**6.** 1994 அக்டோபர் 17 ஆம் நாளன்று தொடங்கும் மற்றும் ***தமிழ்நாடு அரசிதழில்*** இந்தச் சட்டத்தை வெளியிடும் தேதியில் முடிவடையும் கால அளவு வரை நடத்தப்பட்ட, நிருவாக இயக்குநர் வாரியத்தின் இயக்குநராக அல்லது அந்தக் குழு எதனின் உறுப்பினராக பங்கு கொண்ட சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுதல் வாரியம் மற்றும் அதன் குழு எதனின் கூட்டம் எதுவும், அனைத்து முக்கிய காலங்களிலும் நடைமுறையில் இருந்திருக்கும் முதன்மைச் சட்டம் இந்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டிருந்தாற் போன்று, இச்சட்டத்திற்கிணங்க அனைத்து நோக்கங்களுக்காகவும் நடத்தப்பட்டதாகக் கொள்ளப்படும் மற்றும் எப்போதும் செல்லத்தக்க முறையில் நடத்தப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படும்.

**நோக்க–காரண விளக்கவுரை.**

தற்போது, 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுதல் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 28/1978) நிருவாக இயக்குநர் ஒருவரை வாரியத்தின் முழு நேர இயக்குநர்களில் ஒருவராகவும் மற்றும் அந்தச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள வாரியத்தின் ஒப்பந்தப்புள்ளிகள் குழு அல்லாத பிற குழுக்களின் ஓர் உறுப்பினராகவும் நியமனம் செய்வதற்கு வகைமுறை ஏதும் இல்லை. இருப்பினும், மேற்சொன்ன வாரியத்தின் நிருவாக இயக்குநர், 1994, அக்டோபர் 17 ஆம் தேதி முதற்கொண்டு மேற்சொன்ன வாரியத்தின் முழு நேர இயக்குநர்களில் ஒருவராகச் செயல்பட்டு வந்திருக்கிறார். மேலும், அவர் மேற்சொன்ன சட்டத்தின் 17 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள குழுக்களில், ஒப்பந்தப்புள்ளிகள் குழுவினை தவிர்த்து, பிற குழுக்களில் அவர் ஓர் உறுப்பினராக இல்லாத போதிலும், உறுப்பினரின் கடமைகளையும் புரிந்துவந்துள்ளார். நிருவாக இயக்குநர், மேற்சொன்ன வாரியத்தில், முழு நேர அடிப்படையில் இயக்குநர் பதவி நிலையும் மற்றும் அனைத்து சட்டமுறை குழுக்களிலும் ஓர் உறுப்பினராகவும் இருப்பது முற்றிலும் தேவையாக இருப்பதால், நிருவாக இயக்குநரை வாரியத்தின் முழு நேர இயக்குநராகவும் பிற குழுக்களில் ஓர் உறுப்பினராகவும் கூட உள்ளடக்குவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது. அதன்படியே, மேலே கூறப்பட்டுள்ள நோக்கத்திற்காகவும் அத்துடன் வாரியத்தின் மற்றும் குழுக்களின் கூட்டத்திலும் நிருவாக இயக்குநர் பங்குபெறுவதை செல்லத்தக்கதாக்குவதற்கும் கூட, மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 28/1978–ஐ திருத்தம் செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

**2.** இச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவுக்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ்.பி. வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி*
*மற்றும் சிறப்புத் திட்டங்கள்*
*செயலாக்கத் துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.